*Summaries in Tamil*
*Intervention 2007, Volume 5, Number 2, Page 174 - 176*

# Summaries in Tamil

**பொருளாதாரத்தையும் உணர்வுகளையும் இணைத்தல்- முரண்பாட்டுப்பிரதேசங்களில் வலுவூட்டல் என்பதனை கூடுதலாக உள்வாங்கிப் புரிந்துகொள்ளுதலை நோக்கி**

ஆயுத முரண்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறும் செயல் திட்டங்கள் பொதுவாக யுத்தத்தால் மற்றும் திட்டமிட்ட வன்முறைகளினால் ஏற்பட்ட வலு இழத்தல் நிலை, உள்ளிணைத்தல் அற்ற நிலை என்பவற்றை மேலும் வலுப்படுத்துபவனாகவே இருக்கின்றன. இழப்புகள் துயரங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், ஆபத்துக்கள் மற்றும் குழப்பங்கள், மனவடுக்கள் போன்ற சமூக மற்றும் உளவியல் நிகழ்வுகளை முகம்கொடுக்க தனித்தனியே இடையீடுகளை மேற்கொள்ளுவதற்குபதில் அவற்றைப்பிரித்து நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் கையளித்துவிட்டு மற்றய பகுதிக்குரிய திட்டங்களில் அவற்றை அறவே புறம் தள்ளுகின்றன. மறு புறத்தே உளசமூ திட்டங்களில் மக்களுடைய பொருள் தேவைகள் போதுமான அளவிற்கு கவனிக்கப்படுவதில்லை. இந்தப்பிரசுரத்தில் யுத்த முரண்பாட்டுப்பிரதேசங்களில் தனிநபரை முழுமையாக விளங்கிக்கொள்ளவும் மற்றும் கூட்டாக வலுவிழத்தலை சிறந்த முறையில் புரிந்துகொள்ளவும் வலுவூட்டலுக்காக உள்ளிணைந்த ஒரு உளசமூக அணுகுமுறையை இலகுபடுத்தவும் ஒரு கருவி (tool) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த கருவியின் பிரயோகமானது இரண்டு உதாரணங்கள் மூலமாக விபரிக்கப்பட்டுள்ளது: நேபாளநாட்டின் பொருளாதார ரீதியான செயற்பாடுகளில் பணியாளர்கள் தங்களுடைய பயனாளிகளை மிகவும் நெருக்கமாக அவதானித்ததன் மூலமாக கடந்த காலம், எதிர்காலம் பற்றிய பயங்கள் எவ்வளவு தூரம் பொருளாதாரரீதியான அவர்களுடைய செயற்பாடுகளை பாதிக்கும் என்பதனை உணர்ந்துள்ளார்கள். காசாவில் உள்ள உளசமூக திட்டம் ஒன்றில் இந்த முறை∴கருவியானது, பயனாளிகளின் பொருள் தேவையை உளவளத்துணையாளர்கள் ஆழமாக கருத்தில் எடுத்து தொழில் ரீதியான சிகிச்சையான தையல் மற்றும் மட்பாண்ட உற்பத்தி கற்கைகளை ஒரு பொருளாதார வலுவூட்டலாக நடாத்த உதவியது.

**முக்கிய சொற்கதங்கள்:** வலுவூட்டல், காசா (Gaza), நேபாளம் (Nepal), தொடர் மனவடுக்கள், tool kit.

---

**சோமாலியாவில் எதிர்கால மீள் உள்இணைத்தல் திட்டங்களுக்கான சவால்கள்: போதைவஸ்து துஸ்பிரயோகம் பற்றிய ஆய்வின் முடிவுகள், உள நெருக்கீடுகள் மற்றும் மீள் உள்ளிணைத்தலுக்கான தெரிவுகள்**

ஏழு சோமாலிய பிராந்தியங்களில் எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட ஆயததாரிகள் மற்றும் இராணுவத்தினர்களுடன் ஓர் கணிப்பீடு நடாத்தப்பட்டது். இந்த பிரசுரமானது, மேற்குறிப்பிட்ட கணிப்பீட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் சில சமயங்களில் சோமாலியாவின் மூன்று குழுக்களுக்கு ஆயுதங்களைதல், அணி உடைத்தல், மீள் ஒன்றிணைத்தல்த் திட்டங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டி வரலாம் எனத் தெரிவிக்கிறது. கணிப்பீடானது, எதிர்கால மீள் ஒன்றிணைத்தல் வேலைகளுக்காக, பிராந்தியம், வயது, பால் நிலை என்ற அடிப்படையில் பங்குபற்றுவோர் மத்தியில் தனிப்பட்ட விருப்புகள் இருப்பதைத்

தெரிவிக்கின்றது. ஓர் DDR திட்டத்தை நடைமுறைப்படுத்துவதெனில், ஒவ்வொரு முன்னைய போராளிகளினதும் எதிர்பார்ப்புக்கள், உள நெருக்கீடு, போதைவஸ்து பாவனை போன்ற காரணிகள் கணக்கில் எடுக்கப்பட வேண்டுமென ஆய்வின் கண்டுபிடிப்புக்கள் முன்மொழிகின்றன.

**முக்கிய சொற்பதங்கள்:** அணிஉடைத்தல் ஆயுதங்களைதல், மீள் ஒன்றிணைத்தல், பழைய.்.முன்னைய போராளிகள், நுண்ணிய மட்டத் தரவுகள், சோமாலியா, காட் *(khat)*, PTSD, தனிப்பட்ட எதிர்பார்ப்புக்கள்

---

**முக்கியமான ஆராய்ச்சி மற்றும் நடைமுறைகளில் ஏகமனதான முறையின் பயன்பாடு. போராட்டக் குழுக்களுடன் தொடர்புடைய சிறார்களுடனான இடையீடுகளின் அபிவிருத்தியில் உள்ள சந்தேகங்கள்**

தொழில் புரிபவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் முன்னைய சிறுவர் போராளிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பாகப் பெருகிவரும் அனுபவங்களிலிருந்து எவ்வாறு கற்றுக்கொள்ளலாம்? இந்தச் சுருக்கமான அறிக்கை, குறிப்பிட்ட துறையில் கைதேர்ந்தவர்களின் கருத்துக்களைக் கைப்பற்றுவதற்கான ஓர் உதாரணமாக ஏகமனதான முறையைக் காட்டியுள்ளது. இதன் பலனாக, சில ஆராய்ச்சிகளுக்கான முன்னுரிமைத் துறைகளும், நடைமுறைகளின் அபிவிருத்தி முறைகளும் இனங்காணப்பட்டுள்ளன:- முன்னர் யுத்தக் குழுக்களுடன் தொடர்புகொண்டிருந்த பெண் பிள்ளைகளை மீழிணைத்தல், மேம்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு யுக்திகள் மற்றும் சமூக மட்டத்திலான உளசமூக, சிகிச்சை இடையீடுகளின் ஒப்பீட்டளவிலான செயற்றிறனை ஆவணப்படுத்தல் போன்றன ஆகும்.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் போராளிகள், ஏகமனதான முறை, மீழிணைத்தல்

---

**கணிதம், உளசமூக பணி மற்றும் மனித உரிமைகள்: சமூக அமைப்பாளர்களுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்குமிடையான தனித்துவமான பங்குறவு.**

ஒதுக்கப்பட்ட மக்களுடனான சிறந்த உளசமூக பணி செயன்முறையானது சமூக பங்குபற்றலினூடான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. எனினும் ஒதுக்கப்பட்ட சிறுவர்களுக்கான உளசமூக ஆதரவு பற்றிய அநேக அறிக்கைகள் அவை நிதி வழங்குனர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் என்றும் அவற்றின் இலக்குகள் சமூக வலுவூட்டல், உரித்து, கட்டப்பாடு என்பன பற்றி இயம்புகின்றனவேயல்லாது சமூகத்தில் இருந்து உயிர்த்தெழுந்த செயல்மிக்க அமைப்புகளுடனான ஒருங்கிணைப்புப்பற்றி விபரிக்கவில்லை. இந்த அறிக்கை அவ்வாறான ஒரு ஒருங்கிணைப்புபற்றிய அண்மைக்கால உதாரணம் ஒன்றைப்பற்றி சொல்கின்றது. தமிழ் நாட்டில் (இந்தியா) சமூக அமைப்பொன்றின் செயல்வாதிகள் 2004 டிசெம்பர் சுனாமியின் பின் குறிப்பிட்ட இலக்குடைய குறுகிய உளசமூக உதவியினையே வெளியிலிருந்து கேட்டனர். சமூகம் கேட்ட இத்திட்டத்தின் நோக்கம் சமூக கல்வித்திட்டத்தில் உள்ள சிறுவர்களினதும் தொண்டர் ஆசிரியர்களினதும் அறிவு ஆளுமையை வளர்த்தலாகும்.

**முக்கியமான சொற்பதங்கள்:** தலித், உளசமூகம், செய்முறை ரீதியான ஆய்வு பற்றி கற்பித்தல்

**சுனாமிக்குப்பின் ஆக் மாகாணத்தில் நடைபெற்ற MSF இன் உளநல ஆதரவுத்திட்டத்தின் கள அறிக்கை**

யுத்த முரண்பாட்டுப் பிரதேசமான ஆக் மாகாணத்தில் சுனாமிக்குப்பின் இடம்பெற்ற உளநலத்திட்டத்தினை விபரிப்பதாக இக் கட்டுரை அமைகின்றது. வொலிபோல் தளமொன்றை அமைத்து போட்டிகளை நடாத்தல், மற்றும் குழுக்களை அடைத்து அளவளாவலினூடாக பரஸ்பர ஆதரவு மற்றும் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தல் என்பவற்றினூடாக சுமூக நிலைக்கு சுமூக வாழ்வைக் கொண்டுவரல் என்பதை இலக்குவைத்தே தலையீடுகள் அமைந்திருந்தன. தனிப்பட்ட நிலையில் சுமூக நிலை/ இலகுநிலை என்பது உளவளத்துணையூடாக அனுசரணைப்படுத்தப்பட்டது. சமூகம் சார் குழுச்செயற்பாடுகளையே பயனாளிகள் பெரிதும் பாராட்டினார்கள். அதனூடாக தனிப்பட்ட உளவியல் ஆதரவு, உளநலத்துணை என்பவற்றை கூடுதலான மக்கள் அறியாத அணுகுமுறை என்பது உறுதியாவதோடு மக்கள் எதிர்பார்க்கும் நடைமுறைத் தீர்வுகளை இவை எப்பொழுதும் தருவதில்லை.

**முக்கிய சொற்பதங்கள்:** உளநலம், சுனாமி, கையாளும் பொறிமுகைள், உளவளத்துணை, சுமூகநிலைப்படுத்தல்

---

**உள மனவடு பற்றி உணர்வூட்டல்: கொங்கோவில் ஒரு மாவட்டத்தில் இடம்பெற்ற மக்கள் அணிதிரளலின் (campaign) விளைவுகள்.**

கொங்கோவின் வடகிழக்கு ப்பகுதியின் யுத்தத்தாலும் ஆயத முரண்பாட்டாலும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் நெருக்கீட்டு மனவடு பற்றிய (எவ்வாறு சமாளித்தல்) உணர்வூட்டலுக்கான மக்கள் அணிதிரட்டலானது நடைபெற்றது. இந்த மக்கள் அணிதிரளலானது சமூகத்தின் முக்கிய நபர்களின் நெருக்கீடு மனவடு பற்றிய விழிப்புணர்வில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த அறிக்கையில் மக்கள் அணிதிரளல், அதன் விளைவுகள் பற்றி அளிக்கை செய்யப்படுகின்றது.

**முக்கிய சொற்பதங்கள்:** கொங்கோ சோசலிய குடியரசு, உணர்வூட்டல், நெருக்கீட்டு மனவடு, ஆயுத முரண்பாடு

---

**ஈராக்கில் பிள்ளைகள், குடும்பம், மற்றும் ஆசிரியர்களுக்கான உளசமூக ஆதரவு**

ஈராக்கில் சிறுவர்களுக்கான சமூகம்சார் உளசமூக திட்டங்கள் 2003 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர்களின் உள ஆரோக்கியத்தைப் பாதுகாத்தலை இலக்குவைத்த ஆரம்பப்பள்ளிகளிலும், ஆரம்ப சுகாதார மையங்களிலும் உள சமூக செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்ட்டன. இந்தக்கள அறிக்கையானது திட்டத்தினைப்பற்றியும் முகம் கொடுத்த சில சிக்கல்கள் பற்றியும் விபரிக்கின்றது. இந்த அறிக்கை முடிவாக சொல்வது யாதெனில், நம்பிக்கையான பங்களானிகள் கிடைப்பாாகளாயின் ஈராக்கைப்போன்ற இடரான சந்தர்ப்பங்களிலும் கூட உளசமூக நடவடிக்கைகளை நடாத்தலாம் என்பதே.

**முக்கிய சொற்பதங்கள்:** ஈராக், சிறுவர்கள், உளநலம், சமூகம்சார் திட்டங்கள், பாடசாலை சார் திட்டங்கள்